பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு, மருத்துவம் மற்றும் மக்கள்நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஆகியோர் நேற்று (26.12.2024) மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை சார்பாக ஐமுனாமரத்தூரில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பழங்குடியினர் நடமாடும் மருத்துவ ஊர்தியில் செமி ஆட்டோ அனலசர் (ரத்தப் பரிசோதனை பகுப்பாய்வு கருவி) பயன்பாட்டிற்கு வழங்கினார்கள். இந்நிகழ்வில் மாவட்ட ஆட்சித்தலைவர் தெ.பாஸ்கர பாண்டியன், குழும இயக்குநர், தேசிய நலவாழ்வு குழுமம் திட்ட இயக்குநர், தமிழ்நாடு சுகாதார சீரமைப்பு திட்டம் மரு. அருணதம்புராஜ், நாடாளுமன்ற உறுப்பினர்கள் சி.என்.அண்ணாதுரை (திருவண்ணாமலை), எம்.எஸ். தரணிவேந்தன் (ஆரணி), சட்டமன்ற உறுப்பினர்கள் மு.பெ.கிரி (செங்கம்), எஸ்.அம்பேத்குமார் (வந்தவாசி), பெ.சு.தி.சரவணன் (கலசப்பாக்கம்), ஒ.ஜோதி (செய்யாறு), மாநில தடகளச் சங்கத் துணைத்தலைவர் மரு. எ.வ.வே.கம்பன், உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் அரசு துறை சார்ந்த அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

சென்னை, வில்லிவாக்கம், சிவசக்தி காலனியில், நேற்று (26.12.2024) வடசென்னை வளர்ச்சி திட்டத்தின்கீழ் சி.எம்.டி.ஏ. சார்பில் கட்டப்பட்டு வரும் கொளத்தூர் வண்ண மீன்கள் வர்த்தக மையத்தை இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்து, பணிகளை விரைந்து முடித்திட பொறியாளர்கள் மற்றும் ஒப்பந்தாரர்களை அறிவுறுத்தினார். இந்த ஆய்வின்போது வில்லிவாக்கம் சட்டமன்ற உறுப்பினர் வெற்றி அழகன், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழும உறுப்பினர் செயலர் அன்சுல் மிஸ்ரா, முதன்மை செயல் அலுவலர் சிவஞானம், கண்காணிப்பு அலுவலர் மற்றும் நகர் ஊரமைப்பு இயக்கக இயக்குநர் ப.கணேசன், மாநகராட்சி மத்திய வட்டார துணை ஆணையாளர் கே.ஜே.பிரவின் குமார், மண்டலக் குழுத்தலைவர் கூ.பீ.ஜெயின், திருமதி.சரிதா மகேஷ்குமார், மீன்வளத்துறை கூடுதல் இயக்குநர் ஆறுமுகம், சி.எம்.டி.ஏ தலைமைத் திட்ட அமைப்பாளர் எஸ்.ருத்ரமூர்த்தி, கண்காணிப்புப் பொறியாளர் ராஜமகேஷ்குமார், மாநகராட்சி மண்டல அலுவலர்கள் சுரேஷ், முருகன், மாமன்ற உறுப்பினர் திருமதி.சுதா தீனதயாளன் மற்றும் மாநகராட்சி அலுவலர்கள் உடனிருந்தனர்.

சாட்டையடி: நாடாளுமன்றத் தோல்விக்கு பரிகாரம் தேடும் அண்ணாமலை!

இந்தியாவிலேயே தமிழ்நாட்டில்தான் சட்டத்தின் ஆட்சி நடைபெறுகிறது!

வடசென்னை வளர்ச்சித் திட்டப்பணிகளை ஆய்வு செய்தபின் - அமைச்சர் பி.கே.சேகர்பாபு பேட்டி!

சென்னை, டிச. 27- வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் அனைத்து பணிகளையும் விரைவு படுத்தி, மக்களின் பயன் பாட்டிற்கு எவ்வளவு விரைவாக கொண்டு வர முடியுமோ, அவ்வளவு விரைவாக கொண்டு வரப் படும் என்றும் "அண்ணா பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற பாலியல் தொடர்பான சம்பவத் திற்கு 3 மணி நேரத்தில் தமிழ்நாடு காவல்துறை நடவடிக்கை மேற்கொண்டுள்ளது" என்றும் "தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு நன்றாக இருக்கிறது இந்தியாவிலேயே தமிழகத்தில்தான் சட்டத்தின் ஆட்சி நடைபெறுகிறது" என்றும் சி.எம்.டி.ஏ. சார்பில் கட்டப்பட்டு வரும் கொளத்தூர் வண்ண மீன்கள் வர்த்தக மையத்தை ஆய்வு செய்தபின் அமைச்சர் பி.கே. சேகர்பாபு தெரிவித்தார்.

முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின்படி நேற்று (26.12.2024) சென்னை, வில்லிவாக்கம், சிவசக்தி காலனியில், வடசென்னை வளர்ச்சி திட்டத்தின்கீழ் சி.எம்.டி.ஏ. சார்பில் கட்டப்பட்டு வரும் கொளத்தூர் வண்ண மீன்கள் வர்த்தக மையத்தை இந்து சமய அறநிலையத் துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக்குழுமத்தலைவருமான பி.கே.சேகர்பாபு நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்து, பணிகளை விரைந்து முடித்திட பொறியாளர்கள் மற்றும் ஒப்பந்தாரர்களை அறிவுறுத்தினார்.

அதனைத் தொடர்ந்து அமைச்சர் கொளத்தூர் சட்டமன்ற தொகுதியில் இயங்கிவரும் பெரியார் நகர் பொது நூலகத்தை சி.எம்.டி.ஏ சார்பில் முதல்வர் படைப்பகம் அமைப்பது தொடர்பாகவும், பெரியார் நகர் பேருந்து நிலையத்தில் நடைபெற்று வரும் வளர்ச்சி பணிகளையும், அகரம், ஜெகநாதன் தெருவில் கட்டப்பட்டு வரும் கொளத்தூர் இரத்த சுத்திகரிப்பு மையத்தின் வளர்ச்சி பணிகளையும், மற்றும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்ட "முதல்வர் படைப்பகத்தையும்", அதைத்தொடர்ந்து புதியதாக கட்டப்பட்டுவரும் வி.க. நகர் பேருந்து நிலையத்தின் பணிகளின் முன்னேற்றத்தை நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

வடசென்னை வளர்ச்சிப் பணி திட்டங்கள் விரைந்து முடிக்கப்படும்!

பின்னர் இந்து சமய

அறநிலைத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது :

கொளத்தூர் வண்ண மீன்கள் வர்த்தக மையத்திற்கு வேண்டிய உபகரணங்களை கொள்முதல் செய்வதற்கும், தனியாக ஒரு அங்காடி வேண்டுமென்று வண்ண மீன்கள் விற்பனையாளர் சங்கத்தினர் கோரிக்கை வைத்தனர். தமிழ்நாடு முதலமைச்சர் பொறுப்பேற்ற பிறகு சுமார் 4 ஏக்கர் பரப்பளவில் இந்த இடத்தில் 180 க்கும் மேற்பட்டோர் வியாபாரம் செய்வதற்குண்டான கடைகளும், அதேபோல் அந்த தொழிலுக்கு தேவையான உபகரணங்கள் கொள்முதல் செய்வதற்குண்டான கடைகளும், அதேபோல் உணவகங்கள் மற்றும் வண்ணமீன்கள் அக்வாரியம் போன்ற சிறப்பு வசதிகளுடன் கூடிய ஒரு முனையத்தை இங்கு ஏற்பாடு செய்ய உள்ளோம்.

முதல்வர் இந்த வண்ண மீன்கள் உற்பத்தியாளர்களுக்கு தேவையான கட்டுமானத்தை நிறுவுவதற்கு முதல்வர் நேரடியாக இதே பகுதிக்கு வருகை தந்து இந்த பணிகளை துவக்கி வைத்தார்கள். இப்பணிகளுடைய முன்னேற்றத்தை இன்றைக்கு இந்த தொகுதியினுடைய சட்டமன்ற உறுப்பினர் வெற்றி அழகன் அவர்களும், எங்கள் துறையினுடைய உறுப்பினர் செயலர் அன்சுல் மிஸ்ரா, முதன்மை செயல் அலுவலர் சிவஞானம், இந்த தொகுதியினுடைய கண்காணிப்பு அலுவலர் கணேசன், மாநகராட்சி மத்திய வட்டார துணை ஆணையாளர் பிரவீன் குமார் இன்றைக்கு இந்த பகுதியில் கள ஆய்வு செய்து இருக்கின்றோம். இந்த திட்டமானது 2025 செப்டம்பர் மாதத்திற்குள் கொளத்தூர் வண்ண மீன்கள் விற்பனை மையம் பயன்பாட்டிற்கு கொண்டு வருவதற்குண்டான முயற்சிகளை ஆய்வுகள் மூலமாக பணியின் உடைய முன்னேற்றத்தை தொடர்ந்து ஆய்வு செய்து இருக்கின்றோம். இதைத் தொடர்ந்து வடசென்னை வளர்ச்சி திட்டத்தில் இடம்பெற்று இருக்கின்ற பெரியார் நகர் பேருந்து முனையத்தையும், திருவிக நகர் பேருந்து முனையத்தையும், அதேபோல் கொளத்தூர் ஜெகநாதன் தெருவில் அமைய இருக்கின்ற டயாலிசிஸ் மருத்துவமனை பணிகளையும் அதைத் தொடர்ந்து புதியதாக பெரியார் நகர் நூலகத்தில் உருவாக இருக்கின்ற முதல்வர் படைப்பகத்தின் பணி முன்னேற்றங்கள் குறித்தும் தொடர்ந்து ஆய்வினை மேற்கொள்ளவிருக்கின்றோம்.

முதல்வர் கடந்த 14.3.2024 அன்று அடிக்கல் நாட்டிய பணிகளும் அதைத் தொடர்ந்து இரண்டாம் கட்டமாக 4.12.2024 அன்று வால்டாக்ஸ் சாலையில் முதல்வர் நேரடியாக துவக்கப்பட்ட பணிகளையும் சுமார் வடசென்னை வளர்ச்சி திட்டத்திற்குண்டான 252 பணிகளையும் ரூபாய் 6000 கோடி அளவிற்கு மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகளை தொடர்ந்து சென்னை பெருநகர வளர்ச்சி குழுமமும், சென்னை பெருநகர மாநகராட்சியும் ஏனைய துறைகளும் ஒருங்கிணைந்து இந்த பணிகளின் முன்னேற்றத்தை வரும் டிசம்பர் 2025குள் எவ்வளவு பணிகளை மக்கள் பயன்பாட்டிற்கு அளிக்க முடியுமோ அத்தனை பணிகளையும் மேற்கொண்டு மக்களுடைய பயன்பாட்டிற்கு ஒப்படைக்க வேண்டும் என்று துணை முதல்வர் உத்தரவிட்டதன் பேரில் இந்த மாவட்டத்தினுடைய அமைச்சர் என்கிற முறையில் நானும் சட்டப்பேரவை உறுப்பினர்களும், நாடாளுமன்ற உறுப்பினர்களும் இந்த தொகுதியினுடைய சட்டப்பேரவை உறுப்பினர் அன்பிற்கினிய வெற்றி அழகன் அவர்களும் இந்த ஆய்வில் பங்கேற்று இருக்கின்றார்கள். தொடர்ந்து வடசென்னை வளர்ச்சி திட்டத்தின் பணிகளை முடக்கி விட்டு மக்களின் பயன்பாட்டிற்கு எவ்வளவு விரைவாக கொண்டு வர முடியுமோ அவ்வளவு விரைவாக கொண்டு வருவதுக்குண்டான அனைத்து சாத்தியகூறுகளையும் ஆராய்ந்து பணிகளை விரைவுபடுத்தி வருகின்றோம்.

தோல்விக்கு பரிகாரம் தேடும் அண்ணாமலை!

பாஜக தலைவர் அண்ணாமலை காலில் செருப்பு அணிய மாட்டேன், சாட்டையால் அடித்துக் கொள்வேன் என்பது தொடர்பான கேள்விக்கு அமைச்சர் அவர்களின் பதில் வருமாறு:

சபரிமலை மண்டல காலம் முடிந்து அடுத்த மகர விளக்கு பூஜை காலம் தொடங்க இருக்கிறது. ஒரு சிலர் விரத காலங்களில் மாலை அணிந்து கொண்டு இருப்பவர்கள் காலிலே செருப்பு போடாமல் இருப்பார்கள். நான் கூட சபரிமலை ஏறும் போது காலில் செருப்பு அணிய மாட்டேன், இது ஒரு சாக்காக வைத்துக் கொண்டு இருக்கிறாரா என்று எனக்கு தெரியவில்லை.

நாடாளுமன்றத் தேர்தலில் அவர் பெற்ற தோல்விக்கு பரிகாரம் தேடவில்லை, அவர் கொடுத்த பேட்டிகளை நீங்கள் கண்டிருப்பீர்கள். நிச்சயமாக கொங்கு மண்டலத்தில் அனைத்து தொகுதிகளிலும் நாங்கள் வெற்றி பெறுவோம், திமுக 40 தொகுதிகளிலும் டெபாசிட் வாங்காது எழுதி வைத்துக் கொள்ளுங்கள். ஒருவேளை ஜெயித்து விடுவோம் என்று அவர் கூறிய பேட்டியில் எழுதி வைத்துக் கொள்ளுங்கள் என்று உறுதி தந்தாரே அதற்கு பிராயச்சித்தமாக இந்த சவுக்கடிக்கு செல்கிறாரா என்று தெரியவில்லை.

உ.பி.யில் 200 பேர் பலி! இதுவரை சாமியார் மீது நடவடிக்கை இல்லை!

மேலும் அண்ணா பல்கலைக்கழகம் தொடர்பான குற்றம் விளைவித்தவர்களை புகார் பெற்றவுடன் குற்றவாளிகளை 3 மணி நேரத்தில் கைது செய்திருக்கிறோம்.

உத்திர பிரதேசத்தில் ஒரு சாமியார் கூட்டிய கூட்டத்தில் 200க்கும் மேற்பட்டோர் இறந்திருக்கிறார்கள். இதுவரையில் அந்த சாமியார் மீது வழக்கு கூட பதிவு செய்யப்படவில்லை. டெல்லியில் மல்யுத்த வீராங்கனைகள் ஏற்பட்ட கொடுமைக்கு எத்தனை நாட்கள் போராட்ட களத்தில் இருந்தார்கள், அவர்களுக்கு உடனடியாக தீர்வு காணப்பட்டதா, மணிப்பூரில் இன்னும் தொடர்ந்து கொண்டிருக்கிறது வன்முறை இதுவரையில் உலகத்தில் எங்கும் நடைபெறாத அளவுக்கு இதயங்கள் குலுங்கி அழுகின்ற அளவிற்கு ஏற்பட்ட கொடுமைகளை பார்த்திருப்பீர்கள்.

பொள்ளாச்சி சம்பவம் அ.தி.மு.க. ஆட்சியில் எடுத்த நடவடிக்கை என்ன?

பொள்ளாச்சியில் நடைபெற்ற சம்பவத்திற்கு எப்பொழுது வழக்கு பதிவு செய்தார்கள். புகார் பெறுவதற்கு கூட கடந்த ஆட்சி முன் வரவில்லை, எத்தனை நாட்கள் கழித்து புகார் பெற்றார்கள் கைது நடவடிக்கை ஈடுபட்டார்கள். நடந்த சம்பவத்திற்கு நிச்சயமாக எல்லோரும் வருத்தப்படுகிறோம். இது போன்ற சம்பவங்கள் மேலும் நடக்க கூடாது என்று முதல்வர் தீவிரமாக உத்தரவிட்டு காவல்துறையை முடக்கி விட்டு இருக்கிறார். நடந்த சம்பவத்திற்கு உடனடியாக பரிகாரம் தேடப்பட்டிருக்கிறது. நடந்த சம்பவத்தில் ஈடுபட்டவரை இன்னார் என்று பார்க்காமல் உடனடியாக கைது நடவடிக்கையில் ஈடுபட்டு அவரை கைது செய்து சட்டத்தின் முன்பாக நிறுத்தி இருக்கிறோம். முதல்வர் கூட குற்றவாளிகளை விரைந்து விசாரித்து சட்டத்திற்கு உட்பட்டு குற்றத்திற்குண்டான தண்டனை நீதிமன்றம் வாயிலாக பெற்று தருவோம் என்று கூறியிருக்கிறார்.

நடந்த சம்பவம் துரதிஷ்டவசமானது, ஆனால் அதற்குண்டான நடவடிக்கைகள் இந்த அரசு எட்டுக்கால் பாய்ச்சல் எடுத்திருக்கிறது. நாடே மனசாட்சி உள்ளவர்கள் நடுநிலையாளர்கள் இதை பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள். தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு நன்றாக இருக்கிறது. சட்டம் ஒழுங்கு சரியில்லை என்றால் வாய்க்கு வந்ததை எல்லாம் பேசிக் கொண்டு எப்படி சுதந்திரமாக நடமாட முடியும்?

இந்தியாவிலேயே தமிழகத்தில் தான் சட்டத்தின் ஆட்சி நடைபெறுகிறது. நீதிமன்றத்தில் குற்றவாளியை கைது செய்து நீதிமன்ற காவலுக்கு எடுத்துச் செல்கிற போது அதற்குண்டான FIRஐ நீதிமன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டும் அந்த வகையில் ஏதுவாக வெளியாகி இருக்கலாம். இவ்வாறு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு தெரிவித்தார்.

இந்த ஆய்வுகளின் போது வில்லிவாக்கம் சட்டமன்ற உறுப்பினர் வெற்றி அழகன், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழும உறுப்பினர் செயலர் அன்சுல் மிஸ்ரா, முதன்மை செயல் அலுவலர் சிவஞானம், கண்காணிப்பு அலுவலர் மற்றும் நகர் ஊரமைப்பு இயக்கக இயக்குநர் ப.கணேசன், மாநகராட்சி மத்திய வட்டார துணை ஆணையாளர் கே.ஜே.பிரவின் குமார், மண்டலக் குழுத்தலைவர்கள் கூ.பீ.ஜெயின், திருமதி. சரிதா மகேஷ்குமார், மீன்வளத்துறை கூடுதல் இயக்குநர் ஆறுமுகம், சி.எம்.டி.ஏ தலைமைத் திட்ட அமைப்பாளர் எஸ்.ருத்ரமூர்த்தி, கண்காணிப்புப் பொறியாளர் ராஜமகேஷ்குமார், மாநகராட்சி மண்டல அலுவலர் சுரேஷ், முருகன், மாவட்ட நூலக அலுவலர் திருமதி. கவிதா, உள்ளாட்சி பிரதிநிதி ஐ.சி.எப்.முரளிதரன், மாமன்ற உறுப்பினர்கள் திருமதி.சுதா தீனதயாளன், நாகராஜன், திருமதி. தாவூத்பீ, திருமதி.யோகபிரியா, திருமதி.சாரதா, திருமதி.ஸ்ரீதணி மற்றும் மாநகராட்சி அலுவலர்கள் உடனிருந்தனர்.

கடலூர் கிழக்கு மாவட்ட வழக்கறிஞர் அணி ஆலோசனைக் கூட்டம்!

மாவட்டச் செயலாளர் - அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அறிவிப்பு!

கடலூர், டிச. 27- கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க வழக்கறிஞரணி நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் நடைபெற உள்ளது என வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் கழக உயர்நிலை செயல் திட்ட குழு உறுப்பினர் கடலூர் கிழக்கு மாவட்ட திமுக செயலாளர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் அறிவித்துள்ளார்.

இது குறித்து அவரது அறிக்கை வருமாறு:

முதலமைச்சர், கழக தலைவர் அவர்களின் வழிகாட்டுதல்படியும், துணை முதலமைச்சர், கழக இளைஞர் அணி செயலாளர் திரு உதயநிதி ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின்படியும், கழக சட்டத்துறை செயலாளர் நாடாளுமன்ற உறுப்பினர் என்.ஆர். இளங்கோ அவர்களின் அறிவிப்பின்படி, வருகின்ற 30.12.2024, திங்கட்கிழமை, காலை 10.00 மணி அளவில், கடலூர் ஹோட்டல் ஆற்காடு உட்லண்ட்ஸ் ஹோட்டல் அரங்கத்தில் ,கடலூர் கிழக்கு மாவட்ட திமுக வழக்கறிஞரணி நிர்வாகிகள் கூட்டம் நடைபெற உள்ளது. இக்கூட்டத்தில் கழக சட்டத்துறை இணைச் செயலாளர் மத்திய மண்டல பொறுப்பாளர் சூர்யா வெற்றிகொண்டான் அவர்களும், தலைமை கழக வழக்கறிஞர் மூ.தினேஷ்குமார் அவர்களும் கலந்து கொண்டு ஆலோசனை வழங்க உள்ளனர். ஆகவே கூட்டத்தில் மாவட்ட கழக நிர்வாகிகள் முன்னாள், இந்நாள் சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள் மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக செயலாளர்கள், மாவட்ட மாநகர திமுக வழக்கறிஞர் அணி நிர்வாகிகள் நீதிமன்ற வழக்கறிஞர் நிர்வாகிகள் கழக வழக்கறிஞர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்: கழக சட்டத்துறையின் சார்பாக வருகின்ற 18.1.2025 அன்று நடைபெறும் வழக்கறிஞர்கள் அணி 3வது மாநாடு சம்பந்தமாக, கழக பணிகள்.

இவ்வாறு எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் தெரிவித்துள்ளார்.

துணை முதல்வர் பிறந்தநாள் : வட்டச் செயலாளர் எஃப்.பீட்டர்ஜான் தலைமை!

ஆயிரம் விளக்கு கிழக்கு பகுதி 111 வது 'அ' வட்டத்தில் நல உதவிகள்!

நே.சிற்றரசு வழங்குகிறார்! கடலூர் புகழேந்தி - ராஜராஜேஸ்வரி சிறப்புரை!

அன்பகம் கலை - தயாநிதி மாறன் எம்.பி. - நா.எழிலன் எம்.எல்.ஏ. பங்கேற்பு!

சென்னை, டிச. 27 - சென்னை மேற்கு மாவட்டம் ஆயிரம் விளக்கு கிழக்கு பகுதி 111 வது"அ" வட்ட திமுக சார்பில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு பிறந்தநாள் பொதுக்கூட்டமும் நல உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி இன்று (27-12-2024 வெள்ளிக்கிழமை) மாலை 6 மணி அளவில் ரங்கூன் வீதி பத்தாரி சாலை மாலை முரசு அருகில் வட்டச் செயலாளர் பீட்டர் ஜான் தலைமையில் நடைபெறுகிறது.

பகுதி செயலாளர் மா. பா. அன்புதுரை முன்னிலை வகிக்க, து.விக்டர், எம்.சரவணன், எம்.ஆர். ஜம்புலிங்கம், நந்தினி, எம்.நாராயணன், லிங்கேசன், மெய். சண்முகம், எம்.சிவா, கே.தேவிகரிகாலன், பஞ்சு, டி. ஜேசுதாஸ், டி.லோகநாதன், ஜே.சார்லஸ், ராஜ்குமார், பபுலு, அவினாஷ், மைக்கேல், டேவிட், கே.சுரேஷ்குமார், ஜே.வெங்கடேஷ் ஆகியோர் வரவேற்கின்றனர்.

மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு நல உதவிகள் வழங்குகிறார். தலைமைக் கழக பேச்சாளர்கள் கடலூர் புகழேந்தி, ராஜராஜேஸ்வரி ஆகியோர் சிறப்புரையாற்றுகின்றனர். இதில் கழக இணை அமைப்பு செயலாளர் அன்பகம் கலை, தயாநிதி மாறன் எம்.பி., டாக்டர் நா.எழிலன் எம்.எல்.ஏ. நுங்கை வி.எஸ்.ராஜ், கலைகதிரவன், வி.கௌதம், அழகிரி, சதாசிவம், கே.ஜே.சரவணன், வி.எஸ். கலை, ஆர். என்.துரை, சங்கீதா, அகஸ்டின்பாபு, எம்.டி.ஆர். நாதன். ஜெ.நற்குணநாதன், பா.ராபர்ட், எம். வெற்றிசெல்வி, கோ.ரவி. மு.வெங்கடேசன், டி.வைலட்மேரி, எம்.ஜெயக்குமார்,

வட்டச் செயலாளர்கள் ஆர்.பாபு, கோ.யுவராஜ், பா.மகேஷ், டி.தேவராஜ், எம்.என்.விஷ்ணு, எஸ்.சத்திய பெருமாள் எல்.தவமணி, எஸ்.என்கே.ராமன், வி.ஜான்டிசில்வா, பி.கே. மூர்த்தி, ஆர்.வெங்கடேசன், பிரகாஷ், துபாய் விஜய், சீனிவாசன். திருமலை பொன்னுரங்கம். செந்தில்குமார், சரவணன், வி.தேவேந்திரன், ஆர்.சாரதி, ராஜா, அசோக், எஸ்.யோகேஸ்வரி, J.லதாபிளாரன்ஸ், ஜெ.எம். எச்.இம்ரான், மோகனவேல், தா.விநாயகம், எஸ். லில்லி சமாதானம், சி.எஸ். ஆர். சந்தோஷ், ஜெ.ஏஜாஸ், அலிகான், எம்.ஆறுமுகம், ஏஷீபாதானு, அண்ணாதுரை, ஜானி, ஏ.கமலக்கண்ணன், சி. பார்த்தசாரதி, பி.விஸ்வநாதன், டி.அருள்தாஸ், பா பவானி, டி. ராஜாராம், பி .உமா. சங்கர், கோ. சுந்தர்ராஜன், டி.வெங்கடேசன், என். மணி, E.சத்தியா, பி. செல்வி, எ. கணேஷ், ஜி. மாணிக்கம், எஸ். அன்பு, ஈ.ஏழுமலை, ஜி. தேவராஜ், டி.ஆரி. ஜி. செல்வகுமார், ஏ .அருண் ராஜன் ,எம். எஸ். டி. ராமு மற்றும் பலர் கலந்து கொள்கின்றனர்.

இந்நிகழ்ச்சியில் கலந்து கொள்கின்றனர் வட்ட பொருளாளர் என் கோபி நாகலிங்கம் நன்றி கூறுகிறார்

துணை முதலமைச்சர் உதயநிதியின் உதய நாள் விழா சென்னை தெற்கு மாவட்டம் சைதை கிழக்கு பகுதி களிக்குன்றம் 170 அ வட்டத்தில் மு .மகேஷ் லாரன்ஸ், ஜே கவுசல்யா தலைமையில் சிறப்பாக கொண்டாடப்பட்டது. இதில் மாவட்ட கழக செயலாளர் அமைச்சர் மா.சுப்பிரமணியன், பகுதி செயலாளர் மண்டல குழு தலைவர் இரா.துரைராஜ், வட்டக் கழக செயலாளர்கள் கோட்டூர் கோ. சண்முகம், க .மணி, தலைமைக் கழக பேச்சாளர்கள் ஆவடி பாஸ்கர், க.சேவிதா. நாடாளுமன்ற உறுப்பினர் தமிழச்சி தங்கபாண்டியன், துணை மேயர் மு.மகேஷ் குமார், இளைஞர் அணி மகளிர் அணி மாணவர் அணி மற்றும் கழக முன்னோடிகளும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

திருவள்ளூர் மாவட்டம் இராக்கி பேட்டை ஒன்றியத்தில் அம்மையார்குப்பம் ஊராட்சியில் ரூ.2 கோடியே 35 லட்சம் மதிப்பீட்டில் பள்ளி கட்டிடத்தை முன்னாள் ஒன்றிய அமைச்சர் அரக்கோணம் நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் எஸ்.ஜெகத்ரட்சகன் திருவள்ளூர் மேற்கு மாவட்ட செயலாளர் திருத்தணி சட்டமன்ற உறுப்பினர் திருத்தணி எஸ்.சந்திரன் முன்னிலையில் அடிக்கல் நாட்டி பள்ளி கட்டிடம் கட்டுவதற்கான பணிகளை தொடங்கி வைத்தார். உடன் ஒன்றிய செயலாளர் சி.என். சண்முகம், தொகுதி பார்வையாளர் சண்முகநாதன், மாநில நெசவாளர் அணி துணைத் தலைவர் ஓ.ஏ. நாகலிங்கம், ஊராட்சி மன்ற தலைவர் ஆனந்தி செங்கோட்டவன், மாவட்ட நெசவாளர் அணி தலைவர் சி. எம். ரவி, சாம் சுந்தர், அசோக் குமார், பொறியாளர்கள் மணிவண்ணன், முத்தமிழ், தேவன், முரளி, லோகேஷ், உள்பட பலர் உள்ளனர்.